**தலைப்பு – 126 கல்வி அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2013 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கை இரு பகுதிகளைக் கொண்டதாகும்.

பகுதி 1 - அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை.

பகுதி 2 - ஒவ்வொரு தலைப்பிற்குமான விபரமான அறிக்கை.

## பகுதி 1

**கல்வி அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை**

---

### 1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்

| தலைப்பு | திணைக்களப் பெயர் |
|---|---|
| 212 | பரீட்சைகள் திணைக்களம் |
| 213 | கல்வி வெளியீட்டுத் திணைக்களம் |

### 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**(அ) மொத்த ஏற்பாடும் செலவும்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள இரு திணைக்களங்களுக்காக செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 39,643,980,000 ஆனதுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 38,336,126,326 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சினதும் ஒவ்வொரு திணைக்களங்களினதும் தேறிய ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்பு ரூபா 5,350,039 இற்கும் ரூபா 1,158,676,619 இற்கும் இடையிலான வீச்சில் அதாவது மொத்த தேறிய ஏற்பாட்டில் 3

சதவீதத்திலிருந்து 7 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| தலைப்பு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 126 | 37,358,905,000 | 36,200,228,381 | 1,158,676,619 | 3 |
| 212 | 2,206,750,000 | 2,062,922,984 | 143,827,016 | 6 |
| 213 | 78,325,000 | 72,974,961 | 5,350,039 | 7 |
| கூட்டுத்தொகை | 39,643,980,000 | 38,336,126,326 | 1,307,853,674 | |

## (ஆ) வேறு அமைச்சு மற்றும் திணைக்களத்தால் வழங்கப்பட்ட ஏற்பாட்டின் பயன்பாடு

வேறுபட்ட செயற்பாடுகளுக்காக கல்வி அமைச்சால் ரூபா 16,000,000 கூட்டுத்தொகையான ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அவ் ஏற்பாடு பயன்படுத்தப்பட்டமை தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| ஏற்பாடுகள் பெறப்பட்ட திணைக்களம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஏற்பாடு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பயன்பாடு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சேமிப்பு | சேமிப்பு பெறப்பட்ட ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| பரீட்சைகள் திணைக்களம் | 10,000,000 | 2,904,272 | 7,095,728 | 71 |
| கல்வி வெளியீட்டுத் திணைக்களம் | 6,000,000 | 2,313,362 | 3,686,638 | 61 |

**2.2 வருமானக் கணக்கு**

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

அமைச்சின் கீழுள்ள பரீட்சைகள் திணைக்களத்தினால் 2013 ஆம் ஆண்டின் போது ஒரு வருமானக் குறியீட்டின் ரூபா 165 மில்லியன் வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது வருமானமாக ரூபா 156 மில்லியன் தொகை சேகரிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 95 சதவீத வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறாகும்.

| வருமானக் குறியீடு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | |
|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | பற்றாக்குறை | மதிப்பீட்டின் சதவீதமாக பற்றாக்குறை |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 2003.02.13 | 165,000,000 | 156,306,619 | 8,693,381 | 5 |

**2.3 முற்பணக் கணக்குகள்**

**2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள இரு திணைக்களங்களிற்கான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட பின்வரும் எல்லைகள் பின்பற்றப்பட்டிருந்தன. விபரம் பின்வருமாறாகும்.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 12601 | 850,000,000 | 656,880,103 | 675,000,000 | 695,415,936 | 2,750,000,000 | 1,421,746,329 |
| 21201 | 19,000,000 | 16,374,978 | 14,000,000 | 17,071,090 | 100,000,000 | 69,703,732 |
| 21301 | 7,000,000 | 5,831,705 | 3,200,000 | 6,592,383 | 33,000,000 | 18,663,842 |

## 2.3.2 வியாபார முற்பணக் கணக்குகள்

அமைச்சின் கீழுள்ள ஓர் திணைக்களத்தினால் வியாபார முற்பணக் கணக்கொன்று பேணப்பட்டிருந்தது.

### (அ) பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்

வியாபார முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட பின்வரும் எல்லைகளில் செலவு மீதிக்கான எல்லை தவிர்ந்த ஏனைய எல்லைகள் பின்பற்றப்பட்டிருந்தன. விபரம் பின்வருமாறாகும்.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | | செலவு மீதி | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 21302 | 2,500,000,000 | 2,369,186,533 | 2,350,000,000 | 2,399,981,154 | 4,000,000,000 | 967,840,660 | 1,950,000,000 | 1,884,542,544 |

### (ஆ) நிதி விளைவு

வியாபார முற்பணக் கணக்கின் நிதிவிளைவு பின்வருமாறாகக் காணப்பட்டது.

| விடய இல. | முற்பணக் கணக்கின் நடவடிக்கைகள் | நிதி விளைவு | | | |
|---|---|---|---|---|---|
| | | 2013 | | 2012 | |
| | | இலாபம் பிற்போடற் கட்டணம் தவிர்ந்த | இலாபம் பிற்போடற் கட்டணத்துடன் | இலாபம் பிற்போடற் கட்டணம் தவிர்ந்த | இலாபம் பிற்போடற் கட்டணத்துடன் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 21302 | புத்தகங்கள் அச்சிடல், பிரசாரம் மற்றும் விற்பனை | 433,094,651 | 1,394,771,435 | 801,531,896 | 903,764,801 |

## 2.4 கட்டுநிதி மற்றும் பொது வைப்புக் கணக்குகள்

### 2.4.1 கட்டுநிதிக் கணக்கு

அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதிகளில் ரூபா 5,371,579 தொகையான வரவு மீதி ஒன்று நிலவியது. விபரம் பின்வருமாறாகும்.

| அமைச்சு | கட்டுநிதிக் கணக்கு இல | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| கல்வி அமைச்சு | 7002/0000/00/0254/0013/000 | 5,371,579 |

### 2.4.2 பொது வைப்புக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள இரு திணைக்களங்களுக்கு உரித்தான 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 685,519,229 ஆனதுடன் இது தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| அமைச்சு/ திணைக்களம் | வைப்புக் கணக்கு இல. | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| கல்வி அமைச்சு | 6000-0000-00-0006-0064-000 | 493,328 |
| | 6000-0000-00-0006-0065-000 | 10,290,430 |
| | 6000-0000-00-0015-0039-000 | 570,539,493 |
| | 6000-0000-00-0015-0177-000 | 142,594 |
| பரீட்சைகள் திணைக்களம் | 6000-0000-00-0006-0066-000 | 19,604,461 |
| | 6000-0000-00-0015-0094-000 | 76,064,370 |
| கல்வி வெளியீட்டுத் திணைக்களம் | 6000-0000-00-0015-0095-000 | 8,384,553 |
| | | 685,519,229 |

## பகுதி 2

**ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்பிற்குரிய விபரமான அறிக்கை**

### 1. ஒதுக்கீட்டுத் தலைப்பு 126 – கல்வி அமைச்சு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

கல்வி அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதியறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 யூலை 25 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தது.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்களிப்பு உத்தியோகத்தரின்

பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக்கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**1.3 கணக்காய்வு அவதானிப்புகள்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், கல்வி அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பன இதன் (அ) முதல் (ஊ) வரையில் காணப்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 முதல் 1.14 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகள் என்பவற்றை தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

**(அ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மூன்று தேசிய பாடசாலைகளில் ரூபா 22,341,273 கூட்டுத்தொகையான 03 வகையான கொடுக்கல்வாங்கல்களுக்கு உரித்தான விளையாட்டு பயிற்சியாளர்களின் வருகைப் பதிவேடு மற்றும் பயிற்சி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை, முறையான கோவைகள் மற்றும் செலவினப் பேரேடு மற்றும் வருமானப் பேரேடு ஆகிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மூன்று தேசிய பாடசாலைகளுக்கு உரித்தான ரூபா 26,770,534 கூட்டுத்தொகையான 30 நிலையான வைப்புச் சான்றிதழ்கள் தொடர்பாக முறையாக நிலையான வைப்புப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்**

மீளாய்வாண்டின் போது அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்ட 07 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2014 ஆகஸ்ட் 30 ஆம் திகதி வரையிலும்

சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் அவ் ஐயவினாக்களுக்கு உரித்தான கணிப்பிடப்படக்கூடிய கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதி ரூபா 385,147,708 தொகையாகக் காணப்பட்டது.

**(இ) பாதீட்டு முரண்கள்**

13 மூலதன செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 345,671,436 தொகையான ஏற்பாடு முற்றாகச் சேமிக்கப்பட்டிருந்ததுடன் குறித்த காலப்பகுதியின் போது திட்டம் தயாரிக்கப்பட்டிராமை, தாமதமாகி ஏற்பாடுகள் விடுவிக்கப்பட்டிருந்தமை, தேவைப்பாடுகள் முறைப்படி இனங்காணப்பட்டிராமை, தாமதமாகி கொள்வனவுச் செயற்பாடு முடிவுறுத்தப்பட்டமை, கட்டிடம் நிர்மாணிக்கப்படுவதற்குத் தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராத போது ஏற்பாடுகள் கோரப்பட்டு ஏற்ற நிலைகள் இனங்காணப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை, எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டு உதவி பெறப்பட்டிராமை மற்றும் குறித்த செயற்திட்டங்கள் இனங்காணப்படாது ஏற்பாடுகள் கோரப்பட்டிருந்தமை மற்றும் கட்டுநிதி கோரல் ஆண்டின் இறுதி நாட்கள் சிலவற்றில் மேற்கொள்ளப்பட்டிருந்தமை போன்ற காரணங்கள் இதற்குத் தாக்கமளித்திருந்தன.

**(ஈ) அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாட்டை மிகைத்து பொறுப்புகள் ஏற்படல்**

25 செலவின விடயங்களுக்கு ரூபா 12,541,375,496 கூட்டுத்தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இதில் ரூபா 12,290,693,615 தொகை பயன்படுத்தப்பட்டதை அடுத்து சேமிப்பு ரூபா 250,681,881 தொகையாகக் காணப்பட்டது. நிதிப் பிரமாணம் 94(1) இல் காண்பிக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக அச் சேமிப்பை மீறி ரூபா 6,715,906,570 தொகையான பொறுப்புகள் ஏற்பட்டிருந்தன.

**(உ) பொது வைப்புக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நானாவித வைப்புக் கணக்கிற்கு உரித்தான 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 8,178,649 தொகையான வைப்பு மீதி தொடர்பாக

நிதிப் பிரமாணத்தின் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2007 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது அமைய ஊழியர்களின் சம்பளத்தில் கழிக்கப்பட்டிருந்த ஊழியர் சேவை சேமலாப நிதியத்தின் பங்களிப்பு ரூபா 2,176,888 தொகையான ஊழியர் சேவை சேமலாப நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்படாது பொது வைப்புக் கணக்குகளில் வைத்துக் கொள்ளப்பட்டிருந்தன.

**(ஊ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

---

விடய இலக்க 12601 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கங்கள் கூற்று தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வரவு மீதியில் ரூபா 48,376,165 தொகையான கணக்கீட்டு தவறு காரணமாக ஏற்பட்ட மீதியாகும். இதன் கூட்டுத்தொகை ரூபா 47,346,582 தொகை 5 வருடங்களுக்கு மேலான காலமாகவும் ரூபா 357,879 கூட்டுத்தொகை 1 முதல் 5 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமதாக நிலவிவரும் தவறுகளானதுடன் இத் தவறுகள் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் சீராக்கப்படுவதற்கு தவறியிருந்தது.

(ii) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அன்றைய தினத்திற்கான தனியான மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகைக்கும் கட்டுப்பாட்டுக் கணக்குகளின் மீதிக்கும் இடையே இனங்காணப்படாத வேறுபாடு ரூபா 1,976,928 ஆகக் காணப்பட்டது.

(iii) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் 5 வருடங்களுக்கு மேலான காலம் முதல் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 125,058,275 தொகையானதுடன் அந் நிலுவை மீதியை அறவிடுவதற்காக போதிய மற்றும் முறையான நடவடிக்கை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. இதன் படியான 3 ஆதனக் கடன் மீதிகளின் பெறுமதி ரூபா 700,158 ஆகக் காணப்பட்டதுடன் அமைச்சில் இருக்க வேண்டிய பிணை உறுதி தொடர்பாக ஆராய்ந்தறிந்து அக் கடனை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) மொத்த நிலுவைக் கடன் மீதியான ரூபா 2,878,133 இற்கு உரித்தான 70 உத்தியோகத்தர்கள் கடன் கோவையையோ உரிய தகவலையோ கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராத காரணத்தால் அக் கடனை அறவிடுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையோ அல்லது கடன் அறவிடப்படாமைக்கான காரணமேனும் கண்டறியப்பட முடியாதிருந்தது. கோவைகளோ உரிய தகவல்களை பேணுவது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரால் இக் கோவை அல்லது தகவல்கள் கண்டறியப்பட முடியாமை கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

## 1.4 சொத்து முகாமைத்துவம்

### (அ) விளைவற்றதும் குறைந்த பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

அமைச்சிடமுள்ள 02 மோட்டார் வாகனங்களும் 01 மோட்டார் சைக்கிள் 01 வருடத்தைப் பார்க்கிலும் கூடிய காலமாக விளைவற்று அல்லது குறைவான பயன்பாட்டுடன் நிலவியமை தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**(ஆ) பொருள் மெய்மையாய்வு நடாத்தப்படாமை**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2010 திசெம்பர் 17 ஆம் திகதிய பீஎப்/ மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் படி திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆம் திகதிய 441 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் படி, அமைச்சு, 18 தேசிய கல்வியியற் கல்லூரிகள் 09 ஆசிரியப் பயிற்சி நிலையங்கள் மற்றும் 350 தேசிய பாடசாலைகளுக்கு மீளாய்வாண்டிற்கு உரித்தான பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2014 யூலை 01 ஆம் திகதி வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

---

அமைச்சால் சில சொத்துக்கள் முறையற்ற விதத்தில் வெளித்தரப்பினருக்கு விடுவிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பம் அவதானிக்கப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

அமைச்சால் பேணப்பட்ட நிலையான சொத்துப் பதிவேட்டின் படி, அமைச்சிடமிருந்த 06 வாகனங்கள் பௌதீக மெய்மையாய்விற்காகச் சமர்ப்பிக்கப்படுவதற்கு உரிய உத்தியோகத்தர்கள் தவறியிருந்தனர். அந்த 06 வாகனங்களும் 2013 சனவரி 31 ஆம் திகதி முதல் வன வளப் பாதுகாப்பு அமைச்சிற்குக் கொண்டு சென்றிருந்தமையால் வாகனங்களின் உரிமை அவ் அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டு நிலையான சொத்துப் பதிவேட்டிலிருந்து அகற்றப்படுவதற்கோ அல்லது வாகனங்களை மீளப் பெற்றுக்கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) வேறு நிறுவகத்திற்கு உரித்தான சொத்துக்கள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தல்**

---

2013 சனவரி 28 ஆம் திகதி முதல் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட கல்விச் சேவை அமைச்சின் செலவினங்கள், கல்வி அமைச்சு தலைப்பின் கீழ் செலவிடப்பட்டிருந்தது. கல்விச் சேவை அமைச்சால் பயன்படுத்தப்படும் இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சிற்கு உரித்தான

09 வாகனங்களின் பராமரிப்புச் செலவினமாக ரூபா 3,942,247 கூட்டுத்தொகையான ஆண்டின் போது கல்வி அமைச்சின் கீழ் செலவிடப்பட்டிருந்தது. அந்த 09 வாகனங்கள் கல்வி சேவை அமைச்சிற்கு கையேற்கப்பட்டு நிலையான சொத்துப் பதிவேட்டிற்கு உள்ளடக்கப்படுவதற்கோ அல்லது மீள ஒப்படைக்கப்படுவதற்கோ 2013 திசெம்பர் 31 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.5 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசீலனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் விபரிக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| **(அ) அமைச்சரவைத் தீர்மானம்** | | |
| (i) 2009 மே 13 ஆம் திகதிய சீஎம்/09/0736/ 316/020 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம் | | அமைச்சரவையால் தீர்மானிக்கப்பட்ட வாறு வகுப்பறையில் இருக்க வேண்டிய ஆகக் கூடிய மாணவர்களின் எண்ணிக்கை 42 ஆன எல்லைக்கு மேலாக, 1 ஆம் தரத்திலிருந்து 5 ஆம் தரம் வரையான வகுப்புகளுக்கு அவ்வப்போது மாணவர்கள் சேர்க்கப்பட்டதன் காரணமாக 2013 திசெம்பர் 31 வரையிலும் 31 தேசிய பாடசாலைகளில் 5 ஆம் தரத்தில் இருக்க வேண்டிய மாணவர்களின் எண்ணிக்கையைப் பார்க்கிலும் 1,250 மாணவர்கள் உள்ளமை மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது கண்டறியப்பட்டது. அமைச்சரவைத் தீர்மானத்தின் படி |

வகுப்பொன்றில் இருக்க வேண்டிய ஆகக் கூடிய மாணவர்களின் எண்ணிக்கை 42 ஆன எல்லைக்கு மேலாக, மாணவர்கள் சேர்க்கும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக மாத்தறை மாவட்டத்தின் தேசிய பாடசாலைக்கு 35 மாணவர்கள் சேர்க்கப்பட்டமை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டைப் பரீட்சிப்பதற்கு கோவைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2011 பெப்ரவரி 10 ஆம் திகதிய சீஎம்/11/0017/530/003 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம்

விசேட விசாரணைப் பிரிவை ஸ்தாபிப்பதற்காக விசாரணைப் பிரிவை உறுதிப்படுத்த வேண்டியதாகக் குறிப்பிட்டு அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்காத வகையில் விசேட விசாரணை அலகொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. அவ் அலகிற்கு அங்கீகரிக்கப்பட்டிராத விசாரணை உத்தியோகத்தர் பதவிக்காக இலங்கை அதிபர் சேவையில் இருந்தும் இலங்கை கல்வி சேவையில் இருந்தும் இலங்கை ஆசிரியர் சேவையில் இருந்தும் 20 ஊழியர்களும் ஒரு பணிப்பாளரும் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் விசாரணை அலகை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை**

----------------------------------------------------

(i) XII ஆம் அத்தியாயத்தின் 1, 2 மற்றும் 3 ஆம் பிரிவு

(i) கொழும்பு மாவட்டத்தின் தேசிய பாடசாலைகள் இரண்டினதும் கண்டி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் தேசிய பாடசாலைகள் இரண்டினதும் கல்வி மற்றும்

கல்விசாரா பதவியணி அங்கத்தவர்கள் 89 பேரால் அங்கீகாரமின்றி 1,077 கூட்டுத்தொகையான லீவு பெறப்படுவது தொடர்பாக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கொழும்பு மற்றும் மாத்தறை மாவட்டங்களில் இரண்டு தேசிய பாடசாலைகளில லீவுப் பதிவேடு முறைப்படியும் நாளது வரையாகவும் பேணப்பட்டிராமை, கொழும்பு மாவட்ட தேசிய பாடசாலை ஒன்றில் தாமதமாக சேவைக்கு வரும் வழக்கத்தைக் கொண்ட கல்வி மற்றும் கல்விசாரா பதவியணி அங்கத்தவர்களின் கட்டுப்பாட்டிற்காக போதிய நடைமுறைகள் அங்கீகரிக்கப் பட்டிருக்கவில்லை. கல்விசாரா பதவியணி அங்கத்தவர்களிற்கு உரித்தான 05 ஊழியர்களின் 74 கூட்டுத்தொகையான நாட்கள் சம்பளமற்ற லீவிற்காக சம்பளத்திலிருந்து அறவிடப் பட்டிருக்கவில்லை.

(iii) மாத்தறை, மாவட்ட தேசிய பாடசாலையின் 4 ஆசிரியர்களால் 2011 ஆம் 2012 ஆம் ஆண்டுகளின் போது வழங்கப்பட்டிருந்த சம்பளமற்ற விடுமுறை 346 நாட்களுக்காகப் பெறப்பட்டிருந்த சம்பளம் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை.

போலியான தகவல்களைச் சமர்ப்பித்து 13 ஆண்டுகாலமாக தொடர்ந்து சம்பளமற்ற லீவு பெறப்பட்டிருந்த சில ஆசிரியர்களுக்கு தொடர்ந்து சம்பள ஏற்றங்கள் வழங்கப்பட்டிருந்தன.

7 ஆம் பிரிவு — கொழும்பு மாவட்ட தேசிய பாடசாலை ஒன்றில் அதிபரின் அங்கீகாரமின்றி மூன்று ஊழியர்கள் 76 அரசாங்க லீவு நாட்கள் சேவையில் ஈடுபட்டிருந்ததுடன் அந்த 76 லீவில் 72 இற்காக பதில் லீவு பெறப்பட்டிருந்தது.

(ii) XVIII அத்தியாயம் — தாபன விதிக்கோவையில் காணப்படும் ஏற்பாடுகளின் பிரகாரம், கொழும்பு தேசிய பாடசாலை விடுதிக் கட்டுப்பாட்டாளர் விடுதிக்கான வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்**

---

(i) நிதிப் பிரமாணம் 104, 105, 107 மற்றும் 109 — (i) மீளாய்வாண்டின் போது விபத்திற்குள்ளான கொழும்பு தேசிய பாடசாலை ஒன்றில் 03 வாகனங்களும் 2006 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது விபத்திற்குள்ளான அமைச்சிற்கு உரித்தான 12 வாகனங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | | |
|---|---|---|
| | | (ii) 1991 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது தேசிய பாடசாலைகள் மற்றும் அமைச்சின் கீழான பல்வேறு நிறுவகங்களில் 48 சந்தர்ப்பங்களில் ஏற்பட்டிருந்த பல்வேறு நட்டங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப் பிரமாணம் 371 | 06 தேசிய பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது 2008 ஆம் ஆண்டு முதல் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியின் போது பதவியணி அங்கத்தவர்களுக்கு 414 சந்தர்ப்பங்களின் போது ரூபா 4,549,873 தொகையான குறித்த பணிக்கான துணைக் கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் அக் கட்டுநிதி தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப் பிரமாணம் 384(2) | கொழும்பு மற்றும் கண்டி மாவட்டங்களில் இரண்டு தேசிய பாடசாலைகளின் அபிவிருத்திச் சங்கத்தின் கணக்கிலிருந்து கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகையில் காசோலைகள் குறுக்குக் கோடிடப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிதிப் பிரமாணம் 395 (இ) (ஈ) (ஏ) | கொழும்பு மாவட்டத்தின் மத்திய கல்லூரியின் பாடசாலை அபிவிருத்தி சங்க வங்கி நடைமுறைக் கணக்கிற்காக ஒவ்வொரு மாதம் முடிவடைந்து அடுத்து வரும் மாதத்தின் 15 ஆம் நாளுக்கு முன்னர் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (v) | நிதிப் பிரமாணம் 387 | | கொழும்பு மாவட்டத்தின் தேசிய பாடசாலையில் 2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 3,806,579 கூட்டுத்தொகையும் ரூபா 3,839,130 கூட்டுத்தொகையுமான வங்கி மேலதிகப் பற்று வசதிகள் பெறப்பட்டிருந்தன. |
| (vi) | நிதிப் பிரமாணம் 396(ஈ) | 283,109 | கொழும்பு மாவட்டத்தின் தேசிய பாடசாலை மாணவர் விடுதிக்காக பேணப்பட்டிருந்த வங்கி நடைமுறைக்கணக்கிலிருந்து வழங்கப்பட்ட எனினும் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிராத 06 மாதங்கள் காலம் கடந்த 21 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (vii) | நிதிப் பிரமாணம் 1645 (அ) மற்றும் (ஆ) | | கொழும்பு மாவட்டத்தின் தேசிய பாடசாலை ஒன்றின் வாகனங்களின் ஓட்ட அட்டவணைகளும் எரிபொருள் பதிவேடும் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை. எரிபொருள் கட்டுநிதியை மீள்நிரப்பும் பதிவேட்டின் படி, மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த எரிபொருள் பெறுமதி ரூபா 1,034,835 ஆன போதிலும் ஓட்ட அட்டணைகளின் படி பயன்படுத்தப்பட்ட எரிபொள் பெறுமதி ரூபா 795,871 மாத்திரமேயாகும். இதன் படி இனங்காணப்பட்ட எரிபொருள் பற்றாக்குறையின் பெறுமதி ரூபா 233,264 ஆகக் காணப்பட்டது. மேலும் ரூபா 44,000 இற்கு புதிய 4 டயர்கள் பொருத்தப்பட்டு ஓர் வாகனம் ஏலவிற்பனைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. |

(ஈ) சனாதிபதி செயலகத்தின் சுற்றறிக்கை

---------------------------------------------------

| | | |
|---|---|---|
| 2010 மே 14 ஆம் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க அரசாங்க செலவின முகாமைத்துவம் தொடர்பான சுற்றறிக்கையின் 3.4 மற்றும் 4 ஆம் பந்தி | 3,689,193 | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி பயன்படுத்தப்படக் கூடிய வாகனங்களின் எண்ணிக்கையைப் பார்க்கிலும் கூடுதலாக அமைச்சுப் பதவியணியினரால் 03 வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு ரூபா 1,289,279 தொகை பழுதுபார்ப்பிற்காக செலவிடப்பட்டிருந்தது. சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள எரிபொருள் எல்லைக்கு மேலதிகமாக முன்னைய ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் உத்தியோகபூர்வ வாகனத்திற்காகவும் 02 பாதுகாப்பு வாகனங்களிற்காகவும் ரூபா 2,399,914 தொகையான எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது. |

(உ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை

------------------------------------------------

| | | |
|---|---|---|
| 2010 மே 24 ஆம் திகதிய 08/2010 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | 1,230,871 | முன்னைய ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் அமைச்சின் 08 பதவியணி உத்தியோகத்தர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த 08 வாகனங்களிற்காக விநியோகிக்கப்பட வேண்டிய எரிபொருளுக்காக ரூபா 1,676,232 தொகை முறையான வகையில் சம்பளத்துடன் சேர்க்கப்பட்டு செலுத்தப்பட்டிருக்கையில் இதற்கு மேலதிகமாக விநியோகிக்கப்பட்டிருந்த எரிபொருளின் பெறுமதி ரூபா 1,230,871 தொகையாகக் காணப்பட்டது. |

(ஊ) கல்வி அமைச்சுச் சுற்றறிக்கை

-----------------------------------------------------

| | |
|---|---|
| (i) 2008 செப்தெம்பர் 19 ஆம் திகதிய 2008/37 ஆம் இலக்க சுற்றறிக்கை | (i) சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு இணங்காத வகையில் புலமைப்பரிசில் பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்றிருந்த 10 மாணவர்களை பாடசாலையில் சேர்க்காது குறைவான புள்ளிகளைப் பெற்றிருந்த 10 மாணவர்களைச் சேர்ப்பதற்கு கொழும்பு மாவட்டத்தின் தேசிய பாடசாலை ஒன்றின் அதிகாரிகள் செயற்பட்டிருந்தனர். |
| | (ii) சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் ஆங்கில மொழி மூலம் எனவும் சிங்கள மொழி மூலம் எனவும் வகைப்படுத்தி வகுப்புகளை நடாத்த முடியாத போதிலும் கொழும்பு மாவட்டத்தின் தேசிய பாடசாலை ஒன்றில் அவ்வாறு இரு மொழிகளுக்கும் வெவ்வேறான வகுப்புகளை நடாத்தியிருந்தது. புலமைப்பரிசில் பரீட்சையில் குறைவான புள்ளிகளைப் பெற்றிருந்த மாணவர்களின் விண்ணப்பங்களை ஆங்கில மொழிக்காக அனுப்பிவைத்து ஆங்கில மொழி வகுப்பிற்கு வருவதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்குவதற்கியிருந்தமையால் புலமைப்பரிசில் பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்று சிங்கள மொழி மூலம் பாடசாலைக்குள் வருவதற்காக விண்ணப்பங்களை அனுப்பி வைத்த மாணவர்களுக்கு |

| | |
|---|---|
| | பாடசாலைக்கு வருவதற்கான சந்தர்ப்பம் பாடசாலை அதிகாரிகளால் தடுக்கப்பட்டிருந்தது. |
| (ii) 2003 நவம்பர் 07 ஆம் திகதிய 2003/38 ஆம் இலக்க சுற்றறிக்கை 2.1 ஆம் பந்தி | (i) புதிய ஆசிரியர்களை பாடசாலைகளுக்கு அனுப்பும் போது முறையான கொள்கையின் படி செயற்பட்டிராததுடன் ஆசிரிய இடமாற்றக் கொள்கை முறைப்படி அமுலாக்கப்பட்டிராத காரணத்தால் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் இனங்காணப்பட்டிருந்த மொத்த தேசிய பாடசாலை முறைமையில் நிலவும் ஒவ்வொரு விடயத்திற்கு உரித்தான 2,096 ஆசிரியர் பற்றாக்குறையையும் 5,078 மிகையையும் குறைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதில் 2013 திசெம்பர் 31 வரையில் மாத்தறை மாவட்டத்தின் தேசிய பாடசாலை ஒன்றில் உயர் தர புவியியல், பௌத்த கலாச்சாரம், ஆங்கிலம் மற்றும் தொழிநுட்பப் பாடத்தைக் கற்பிப்பதற்கு ஒரு ஆசிரியரேனும் இருக்கவில்லை.<br><br>(ii) சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி, இருக்க வேண்டியதாக இனங்காணப்பட்டிருந்த விசேட கல்வித் திறன் டிப்ளோமா பெற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் 2013 திசெம்பர் 31 வரையில் அவ் ஆசிரியர்களின் வெற்றிட எண்ணிக்கை 476 ஆகக் |

காணப்பட்டது. அத்தினத்திலான உள்ளபடியான ஆசிரியர்களின் எண்ணிக்கை முறைப்படி ஈடுபடுத்தப்பட்டிராத காரணத்தால் விசேட தேவையுடனான 1,145 பிள்ளைகள் கற்கும் 128 பாடசாலைகளுக்கு விசேட கல்வித் திறன் டிப்ளோமா பெற்ற ஆசிரியர்கள் எவரும் ஈடுபடுத்தப்பட்டிராத போதிலும் விசேட தேவையுடனான பிள்ளைகள் எவரும் அற்ற 162 பாடசாலைகளிற்கு அத்தகைய 176 ஆசிரியர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

2.2 ஆம் பந்தி

(i) சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி, கொழும்பு மாவட்டத்தின் தேசிய பாடசாலை ஒன்றிற்காக அங்கீகரிக்கப்பட்ட பிரதி அதிபர்களும் உப அதிபர்களும் எண்ணிக்கைக்கு மேலதிகமாக இரு பிரதி அதிபர்களும் பத்து உப அதிபர்களும் நியமிக்கப்பட்டிருந்தனர். பிரதி அதிபர்கள் பதவி வகிக்கும் மூவரும் உப அதிபர்கள் பதவி வகிக்கும் பதினொரு பேரும் முறையாக நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பிரதி அதிபர்களுக்கும் உப அதிபர்களுக்கும் ஒரு கிழமைக்கு ஆகக் குறைந்தது முறையே 10 பாடங்களும் 12 பாடங்களும் கற்பித்தல் நடவடிக்கைகள்

ஒப்படைக்கப்பட வேண்டிய போதிலும் கொழும்பு மாவட்டத்தின் தேசிய பாடசாலை ஒன்றில் முறையான நியமனம் பெற்ற மற்றும் பெறாத பிரதி அதிபர்கள் ஐவரும் தொடர்பில் அத் தேவைப்பாடு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே ஒரு பிரதி அதிபர் ஒரு பாட வேளையேனும் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப் பட்டிருக்கவில்லை. இவ்வாறே முறையான நியமனம் பெறாத உதவி அதிபர்கள் பதினொரு பேர் தொடர்பில் அத் தேவைப்பாடு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) கண்டி மாவட்டத்தின் தேசிய பாடசாலை ஒன்றின் மூன்று பிரதி அதிபர்களுக்கும் உப அதிபருக்கும் மாத்தறை மாவட்டத்தின் தேசிய பாடசாலை ஒன்றின் இரு பிரதி அதிபர்களுக்கும் கற்பித்தல் நடவடிக்கைகளுக்காக ஒரு பாடவேளையேனும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

2.1.2 மற்றும் 2.1.3 ஆம் பந்தி

கண்காணிப்புச் செயற்பாட்டில் ஈடுபட்ட மற்றும் பாடங்களைக் கற்பிப்பதில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களுக்கு முறையே ஒரு கிழமைக்கு ஆகக் குறைந்தது 16 பாடவேளைகளும் 35 பாடவேளைகளும் கற்பித்தல் கடமைகளை ஒப்படைக்க வேண்டிய போதிலும் கொழும்பு, கண்டி மாத்தறை மாவட்டங்களில் ஐந்து தேசிய பாடசாலைகளில் குறித்த

| | |
|---|---|
| | பாடவேளைகளுக்கும் குறைந்த அளவான பாடவேளைகள் வழங்கப்பட்டிருந்த 383 ஆசிரியர்கள் காணப்பட்டனர். |
| (iii) 2007 திசெம்பர் 31 ஆம் திகதிய 2007/20 ஆம் இலக்க சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி, பாடசாலை ஒன்றில் கடமையாற்றிய ஆகக் கூடுதலான சேவைக் காலமான 06 ஆண்டு கால எல்லையை மிகைத்த ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக,<br>(i) கொழும்பு கல்வி வலயத்திற்கு உரித்தான 20 தேசிய பாடசாலைகளில் 512 ஆசிரியர்கள் 11- 30 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியும்,<br>(ii) கொழும்பு மாவட்டத்தின் தேசிய பாடசாலை ஒன்றின் 48 ஆசிரியர்கள் 12 - 27 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியும்,<br>(iii) கண்டி மாவட்டத்தின் தேசிய பாடசாலை ஒன்றில் 19 ஆசிரியர்கள் 13 – 26 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியும்,<br>(iv) மாத்தறை மாவட்டத்தின் தேசிய பாடசாலை ஒன்றின் 56 ஆசிரியர்கள் 10 – 30 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியும், |

| | | | |
|---|---|---|---|
| | | | (v) கொழும்பு மாவட்டத்தின் மத்திய மஹா வித்தியாலயம் ஒன்றில் 18 ஆசிரியர்கள் 11 – 31 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியும், |
| | | | (vi) மாத்தறை மாவட்டத்தின் தேசிய பாடசாலை ஒன்றின் 29 ஆசிரியர்கள் 9 – 25 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியும், |
| | | | (vii) மாத்தறை மாவட்டத்தின் மகளிர் கல்லூரி ஒன்றில் 21 ஆசிரியர்கள் 12 – 26 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியும், இடமாற்றம் வழங்கப்படாது சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். |
| (iv) | 2009 யூன் 30 ஆம் திகதிய 2009/20 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | 5,393,000 | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தேவையான தகைமைகளைப் பரீட்சிக்காது கொழும்பு மாவட்டத்தின் தேசிய பாடசாலை ஒன்றின் அதிகாரிகளால் 32 விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள் சேர்க்கப்பட்டு ரூபா 5,393,000 தொகையான படிப்பணம் செலுத்தப்பட்டிருந்தது. |
| (v) | 2007 பெப்ரவரி 28 ஆம் திகதிய 2007/04 ஆம் இலக்க சுற்றறிக்கை | 1,740,000 | சகல புலமைப்பரிசில் பெறுனர்களுக்கும் புலமைப்பரிசில் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் மாணவர்கள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய சகல தகவல்களும் பூர்த்தி செய்யப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டிராத காரணத்தால் |

(i) கொழும்பு மாவட்டத்தின் தேசிய பாடசாலை ஒன்றில் 282 மாணவர்களுக்கு ரூபா 243,000 தொகையும்,

(ii) கண்டி மாவட்டத்தின் தேசிய பாடசாலை ஒன்றில் 10 மாணவர்களுக்கு ரூபா 21,000 தொகையும்,

(iii) மாத்தறை மாவட்டத்தின் தேசிய பாடசாலை ஒன்றில் 328 மாணவர்களுக்கு ரூபா 1,476,000 தொகையுமாக மாணவ உதவுதொகை கிடைக்கப்பெறாது போயிற்று.

| | | |
|---|---|---|
| (vi) | 2007 சனவரி 10 ஆம் திகதிய 2007/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி, மாணவர்கள் உண்பதற்காக பழ வகைகள், பயறு, கடலை, கௌபி போன்ற தானிய வகைகள் அடங்கலாக போசனையான உள்நாட்டு உணவு வகைகள் வழங்கப்பட வேண்டிய போதிலும் கொழும்பு மாவட்டத்தின் தேசிய பாடசாலை ஒன்றில் விடுதி மாணவர்களின் உணவுக்காக அத்தகைய உணவு வகைக்குப் பதிலாக கோதுமை மா பயன்படுத்தப்பட்டு தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. வாரம் தோறும் உணவுப் பட்டியல் தயாரிக்கப்பட்டு மாணவர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் அக் கல்லூரிச் சிற்றுண்டியிலும் சகல சிற்றுண்டி வகைகளும் கோதுமை மாவால் தயாரிக்கப்பட்டவையாகவே காணப்பட்டன. |

| | | | |
|---|---|---|---|
| (vii) | 2001 ஒக்டோபர் 08 ஆம திகதிய 2001/24 ஆம் இலக்க சுற்றறிக்கை | 685,970 | மாவட்டத்தின் தேசிய பாடசாலை ஒன்றில் மீளாய்வாண்டின் போது அன்பளிப்பாகக் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 555,970 பெறுமதியான பொருட்கள் அன்பளிப்புப் பதிவேட்டிலும் பொருட் பதிவேட்டிலும் பதியப்பட்டிராததுடன் இதில் ரூபா 130,000 பெறுமதியான பொருட்கள் 2014 பெப்ரவரி 20 ஆம் திகதி நடாத்தப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் போது சமர்ப்பிக்கப்படுவதற்கு உரிய அதிகாரிகள் தவறியிருந்தனர். |
| (viii) | 1975 நவம்பர் 05 ஆம் திகதிய 57/75 ஆம் இலக்க சுற்றறிக்கை | 4,348,860 | (i) கண்டி மாவட்டத்தின் தேசிய பாடசாலை ஒன்றின் மாணவர்களிடமிருந்து ஆண்டு தோறும் அறவிடப்படும் பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கட்டணமும் வசதிகள் மற்றும் சேவைக் கட்டணங்கள் உரிய ஆண்டுகளின் போது முறையாக அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராத காரணத்தால் 525 மாணவர்களிடமிருந்து 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவைத் தொகை ரூபா 4,348,860 ஆகக் காணப்பட்டது.<br><br>(ii) மாத்தறை மாவட்டத்தின் தேசிய பாடசாலை ஒன்றில் வசதிகள் மற்றும் சேவைக் கட்டணங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட பாதீடு இன்மை, நான்கு மாதக் கணக்குகளின் பொழிப்பு உரிய பிரிவிற்கு |

சமர்ப்பிக்கப்பட்டிராமை, வசதிகள் மற்றும் சேவைக் கட்டணங்கள் கணக்கிலிருந்து செலவிடப்படக் கூடிய வகைப்படுத்தலுக்கு உரித்தற்ற செலவினங்களுக்காக ரூபா 89,000 செலுத்தப்பட்டிருந்தமை போன்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டதுடன் வசதிகள் மற்றும் சேவைக் கட்டணங்கள் வருமானச் சேகரிப்பிற்காக பேணப்பட்ட வங்கி நடைமுறைக் கணக்கில் ஆண்டிற்கான வழமையான நிதித் தேவைப்பாடுகளுக்கு மேலாக வருமான உழைப்பு இன்றி ரூபா 12 இலட்சத்திற்குக் கூடுதலான தொகை வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக, மாத்தறை மாவட்டத்தின் தேசிய பாடசாலை ஒன்றால் முதலாம் தரத்திற்காக 03 மாணவர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர்.

## 1.6 செயற்திட்டம் நடைமுறைப்படுத்தலிலான நலிவுகள்

### (அ) செயற்திட்டம் மேற்கொள்ளப்படுவதிலான தாமதம்

அமைச்சால் பின்வரும் செயற்திட்டங்கள் மேற்கொள்வதில் தாமதம் அவதானிக்கப்பட்டது.

(i) அறிவுக் களஞ்சிய மன்றத்தின் அடிப்படையாக பாடசாலைக் கல்வி முறைமையை புனரமைக்கும் செயற்திட்டத்திற்காக 2012

ஆம் 2013 ஆம் ஆண்டுகளுக்காக முறையே ரூபா 232,455,060 தொகையும் ரூபா 626,684,325 தொகையுமான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி முன்னேற்றம் 84 சதவீதமாக இருந்த போதிலும் இது மீளாய்வாண்டின் போது 38 சதவீதம் மாத்திரமேயாகும். இதன் படி செயற்திட்ட நோக்கத்திற்காக மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்த மொத்த நிதியத்தில் 62 சதவீதத்திற்குச் சமனான ரூபா 384,832,149 தொகை எதிர்பார்த்த செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் மொத்த நிதி முன்னேற்றம் 51 சதவீதம் மாத்திரமேயாகக் காணப்பட்டதுடன் செயற்திட்டத்தின் நோக்கத்திற்காக வழங்கப்பட்டிருந்த மொத்த நிதியத்தில் 49 சதவீதத்திற்குச் சமனான ரூபா 420,786,511 தொகை எதிர்பார்த்த செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) முன்னைய ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் 859 ஆய்வுகூடங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 4,364,105,710 தொகையான ஏற்பாடு அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 வரையிலும் உள்ளபடியான செலவினம் ரூபா 4,106,338,371 ஆகக் காணப்பட்டது. திட்டமிடப்பட்டிருந்தவாறு 2013 திசெம்பர் 31 வரையில் 859 ஆய்வுகூடங்களின் வேலை பூர்த்தியடைந்திருக்க வேண்டிய போதிலும் அன்றைய தினம் வரை வேலை பூர்த்தியடைந்திருந்த ஆய்வுகூடங்களின் எண்ணிக்கை 380 மாத்திரமேயாகும். நிதி முன்னேற்றம் 94 சதவீதமாகக் காணப்பட்ட போதிலும் 479 ஆய்வுகூடங்களின் வேலை பூர்த்தியடைந்திராமையால் பௌதீக முன்னேற்றம் 44 சதவீதமாக மாத்திரமே காணப்பட்டது.

(iii) கொழும்பு மாவட்டத்தின் தேசிய பாடசாலை ஒன்றின் வளாகத்தில் 2004 ஆம் ஆண்டிற்கு முன்னர் நிர்மாணிப்புகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த கட்டிடத்தின் இரண்டாம் மாடி மற்றும் பகுதியளவில் பூர்த்திசெய்யப்பட்டிருந்த வேறு கட்டிடங்கள் இரண்டின் இரண்டாம் கட்டம் ஆரம்பிக்கப்பட்டிராத காரணத்தால்

இரண்டாம் கட்டத்திற்காக உருவாக்கப்பட்ட கம்பிகள் 10 ஆண்டு காலமாக உக்கிய நிலையை அடைந்திருந்தது. மேலும் மூன்று கட்டிடத்தின் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் 2010 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு முதலாம் மற்றும் இரண்டாம் கட்டங்கள் பூர்த்தியடைந்திருந்த போதிலும் மூன்றாம் கட்டம் செயற்படுத்தப்பட்டிராமையால் இரண்டாம் மாடி பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட முடியாத நிலையில் காணப்பட்டது. மூன்றாம் கட்டத்திற்குத் தேவையான ரூபா 8,059,501 தொகை அமைச்சு பொது வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும் உரிய அங்கீகாரம் கிடைக்கப்பெற்றிராமையால் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முடியாதிருந்தன.

## 1.7 செயலாற்றல்

2013 வருடாந்த பாதீட்டு மதிப்பீடு, கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி அமைச்சின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்பு பின்வருமாறாகும்.

### (அ) போதியளவில் மேற்கொள்ளப்பட்டிராத பிரதான செயற்பாடுகள்

அமைச்சால் பிரதான செயற்பாடுகள் போதியளவில் மேற்கொள்ளப்பட்டிராததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகும்.

(i) ''யுனெஸ்கோ புலமைப்பரிசில் நிதியம்'' எனும் நிதியம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் நிதியத்தின் நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாட்டு முகாமைத்துவச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. நிதியம் ஸ்தாபிக்கப்படும் நோக்கத்தை அடைவதற்காக 1999 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரை சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 10,290,430 தொகையான நிதியம் பயன்படுத்தப்பட்டு அந் நோக்கங்களை எய்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் அத் தொகை பொது வைப்புக் கணக்கில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) 2006 ஏப்ரல் 25 ஆம் திகதிய 06/2006 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி, இலங்கை கல்வி நிர்வாகச் சேவை, இலங்கை கல்வியியல் சேவைகள், இலங்கை அதிபர் சேவை மற்றும் இலங்கை ஆசிரியர் சேவை எனும் சேவைகள் நான்கிற்கும் உரித்தான சேவைக் குறிப்புகள் தயாரிக்கப்பட்டு அங்கீகரித்துக் கொள்வதற்கு தவறப்பட்டிருந்தது.

**(ஆ) நீண்ட காலதாமதத்துடன் மேற்கொள்ளப்பட்டிராத செயற்பாடுகள்**

----------------------------------------------------------------------------------------------------------------

1985 ஆம் அன்பளிப்பாகப் பெறப்பட்டிருந்த பிரேல் அச்சீட்டு இயந்திரம் முறையான பராமரிப்புச் செய்யப்பட்டிராத காரணத்தால் செயலிழந்து போயிற்று. பின்னர் கொள்வனவு செய்யப்பட்டிருந்த இயந்திரம் திருத்தவேலைகளில் நீண்ட காலதாமதம் ஏற்பட்டிருந்தமை, தேவையான மூலப்பொருட்களின் கொள்வனவு சரியான நேரத்தில் மேற்கொள்ளப்பட்டிராமை மற்றும் பதவியணிப் பற்றாக்குறை போன்ற காரணங்களால் கட்புலனற்ற மாணவர்களுக்கு 2013 ஆம் ஆண்டின் போது அச்சிடப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட வேண்டியதாகக் காணப்பட்ட 3,220 பிரேல் பாட நூல்களில் 1,957 நூல்கள் 2013 திசெம்பர் 31 வரையிலும் 2014 ஆம் ஆண்டிற்காக அச்சிட்டு விநியோகிக்கப்பட வேண்டிய 1,914 பிரேல் பாட நூல்களில் 656 நூல்கள் 2014 பெப்ரவரி 20 ஆம் திகதி வரையிலும் அச்சிடப்பட்டிருக்கவில்லை.

**(இ) பாடசாலைசார் கற்கை மேம்பாட்டு மானியம்**

------------------------------------------------------------------

பாடசாலைசார் கற்கை மேம்பாட்டு மானியம் வழங்கப்படுவதற்காக முதலாம் கட்டத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட 50 தேசிய பாடசாலைகளும் 359 மாகாணப் பாடசாலைகளுமாக 409 பாடசாலைகளுக்கு முன்னைய ஆண்டின் போது ரூபா 162,400,000 கூட்டுத்தொகையான மானியமும், இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டங்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 132 பாடசாலைகளும் 466 மாகாணப் பாடசாலைகளுமாக 598 பாடசாலைகளுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 89,550,000 தொகையான மானியம் வழங்கப்பட்டிருந்தது. மானியங்களைப்

பயன்படுத்திய அதிபர்களால் தயாரிக்கப்பட வேண்டிய செயற்திட்டப் பிரேரணைகள் இடைக்கால அறிக்கை மற்றும் ஒட்டுமொத்த முன்னேற்றம் தொடர்பான அறிக்கை எதுவும் உரிய தரப்பினர்களிடமிருந்து பெறப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக மானியங்கள் வழங்கப்பட்டதன் நோக்கம் எய்தப்படுவது தொடர்பாக நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் மீளாய்வு செய்யப்படுவதற்கு முடியாதிருந்தது.

**1.8 வங்கிக் கணக்கு செயற்படுத்துவதிலான குறைபாடுகள்**

---

**(அ) செயற்பாடற்ற வங்கிக் கணக்குகள்**

---

அமைச்சால் பேணப்பட்டு வரும் 08 வங்கி நடைமுறைக் கணக்குகள் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் 06 வருட காலமாக செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன் இவற்றில் 03 கணக்குகளிற்குரிய செயற்பாடற்றுக் காணப்பட்ட மீதியின் கூட்டுத்தொகை ரூபா 1,192,335 ஆகக் காணப்பட்டது. 2007 செப்தெம்பர் 05 ஆம் திகதிய 2007/05 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் (1) ஆம் பந்தியில் காணப்படும் ஏற்பாடுகளின் பிரகாரம் 2013 திசெம்பர் வரையில் அந்த 08 வங்கிக் கணக்குகளும் மூடப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) சீராக்கப்பட வேண்டிய மீதி**

---

சமர்ப்பிக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கின் குறிப்பு இல. (iv) (ஆ) இல் காண்பிக்கப்பட்டவாறு, வழங்கப்பட்டு ஆனால் காலாவதியாகிய கொடுப்பனவுகளுக்காக சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் பெறுமதி ரூபா 1,709,647 தொகையானதுடன் இது தொடர்பாக நிதிப் பிரமாணம் 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.9 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---

அமைச்சால் ஏற்படுத்தப்பட்டிருந்த சில கொடுக்கல்வாங்கல்கள் முறையற்றவையாகக் காணப்பட்டன. அவதானிக்கப்பட்ட அத்தகைய சில சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகும்.

**(அ) கொள்வனவு வழிகாட்டிக் கோவையிலிருந்து விலகல்**

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது கொள்வனவு வழிகாட்டிக் கோவையிலிருந்து விலகல்கள் கண்டறியப்பட்டன.

(i) கொழும்பு, கண்டி, மாத்தறை மாவட்டங்களின் மூன்று தேசிய பாடசாலைகளால் 31 சந்தர்ப்பங்களின் போது அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகள் பின்பற்றப்படாது ரூபா 4,070,374 தொகையான பண்டங்களும் சேவைகளும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இப் பண்டங்களும் சேவைகளும் ஆகக் குறைந்த விலைக்குக் கொள்வனவு செய்யப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந்த 31 சந்தர்ப்பங்களிற்காகவும் சமர்ப்பிக்கப்பட்ட கோவைகளில் உள்ள தகவல்கள் போலியானவையாகக் காணப்பட்டன.

(ii) எழுத்து மூல உடன்படிக்கையின்றி கண்டி மாவட்டத்தின் தேசிய பாடசாலை ஒன்றில் மலசலகூட முறைமையைத் திருத்துவதற்காகவும் மேம்படுத்துவதற்காகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த ஓர் நிறுவனத்திற்கு ரூபா 575,000 தொகையான ஒப்பந்தப் பெறுமதியுடனான ஓர் ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தக் கோவைகள் பேணப்பட்டிராததுடன் அந் நிறுவகங்களால் அனுப்பிவைக்கப்பட்டிருந்த மனுக்களை மாத்திரம் கணக்காய்விற்காகச் சமர்ப்பித்திருந்த காரணத்தால் பின்பற்றப்பட்டிருந்த கொள்வனவு நடைமுறையின் வெளிப்படைத்தன்மையின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது.

(iii) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையில் காணப்படும் ஏற்பாடுகளைப் பின்பற்றாது கொழும்பு மாவட்டத்தின் தேசிய பாடசாலை ஒன்றின் புதிய மண்டபம் அமைந்துள்ள கட்டிடத்தைத்திருத்துவதற்காக மீளாய்வாண்டின் போது பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கணக்கிலிருந்து ரூபா 3,430,390 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் திருத்தவேலைகளுக்காக செலவின மதிப்பீடும் அளவீட்டுப் பட்டியலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) அதிகாரம் இல்லாத கொடுக்கல்வாங்கல்கள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கொழும்பு மாவட்டத்தின் தேசிய பாடசாலை ஒன்றில் பிரதி அதிபரின் உத்தியோகபூர்வ இல்லத்திற்குரிய மின்சாரப் பட்டியலுக்காக ரூபா 141,410 கூட்டுத்தொகை பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கணக்கிலிருந்து செலுத்தப்பட்டிருந்த போதிலும் அத் தொகை உரிய உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) கொழும்பு மாவட்டத்தின் தேசிய பாடசாலையின் அதிகாரிகளால் பாடசாலையின் பல்வேறு நடவடிக்கைகளுக்காக அங்கீகாரமின்றி 2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 4,339,050 தொகையும் ரூபா 6,926,120 தொகையும் அனுமதியில்லாமல் பெற்றோரிடமிருந்து சேகரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக 2013 ஆம் ஆண்டின் போது பல்சுவை அம்சமொன்றை நடாத்துவதற்கு மாணவ மாணவியர்களுக்கும் பெற்றோருக்கும் சுமை ஏற்படாத வகையில் பணம் சேகரிக்க முடியுமா என்பதைக் கருத்திற்கொள்ளாது அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தமையால் ரூபா 3,502,500 தொகை பெற்றோரிடமிருந்து சேகரிக்கப்பட்டிருந்தது.

(iii) மாத்தறை மாவட்டத்தில் தேசிய பாடசாலை அதிகாரிகளால் 2014 ஆம் ஆண்டின் போது இரு சந்தர்ப்பங்களின் போது எதுவித சட்டரீதியான அடிப்படையும் இன்றி மாணவர்களிடமிருந்து ரூபா 636,000 தொகை பற்றுச்சீட்டுக்கள் எதுவும் வழங்கப்படாது சேகரித்து பாடசாலை அபிவிருத்தி சங்கக் கணக்கிற்கு செலவு வைக்கப்படாது பிரதி அதிபரின் பொறுப்பில் வைத்துக்கொள்ளப்பட்டு பற்றுச்சீட்டுக்கள் மற்றும் சிட்டைகளின் மூலம் செலவினங்கள் உறுதிப்படுத்தப்படாது பல்வேறு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தன. அந் நடவடிக்கைகளுக்காக பாடசாலை அபிவிருத்தி சங்கத்தாலும் ரூபா 145,985 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(iv) 2011 ஆம் 2012 ஆம் ஆண்டுகளின் போது மாத்தறை மாவட்டத்தின் பாடசாலை ஒன்றின் முதலாம் தரத்திற்கு மாணவர்களைச் சேர்க்கையில் ஒவ்வொரு ஆண்டின் போதும் ஒவ்வொரு மாணவனிடமிருந்தும் முறையே ரூபா 7,000 படியும் ரூபா 5,000 படியும் பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2011 ஆம் ஆண்டின் போது அவ்வாறு சேகரிக்கப்பட்ட தொகையோ அல்லது அப் பணம் செலவிடப்பட்ட விதம் குறித்தோ எவ்வித அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் 2012 ஆம் ஆண்டின் போது இதன் மூலம் பெறப்பட்டிருந்த தொகை ரூபா 463,000 ஆல் ரூபா 70,000 வெளி நபர் ஒருவரால் கையில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

(v) மாத்தறை மாவட்டத்தின் பாடசாலை ஒன்றின் பழைய மாணவர் சங்க விளையாட்டு அபிவிருத்தி நிதியம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் அச் சங்கத்திற்கு டிக்கட்கள் அச்சிடப்பட்டு பணத்தைச் சேகரிப்பதற்காக வலயக் கல்வி பணிப்பாளரால் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. விளையாட்டு அபிவிருத்தி நிதியத்திற்காக ரூபா 20 படியான டிக்கட்கள் அச்சிடப்பட்டு விற்பனை செய்யப்பட்டிருந்தன. அச்சிடப்பட்ட டிக்கட்களின் எண்ணிக்கை, விற்பனை செய்யப்பட்ட டிக்கட்களின் எண்ணிக்கை மற்றும் எஞ்சிய டிக்கட்களின் எண்ணிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. விளையாட்டு அபிவிருத்தி நிதியச் செயலாளரால் மாதத்தின் இறுதித் தினத்தில் ரூபா 50,000 இற்கு மேற்பட்ட காசு மீதி கையில் வைத்திருந்த சந்தர்ப்பங்கள் 21 ஆகும்.

(vi) தாய்லாந்து அரசாங்கத்திலிருந்து பெறப்பட்ட அழைப்பின் பேரில் 2012 ஆகஸ்ட் 21 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரையான காலப்பகுதியின் போது நடாத்தப்பட்ட வெளிநாட்டு கல்வி செயலமர்வுகளுக்காக கொழும்பு மாவட்டத்தின் தேசிய பாடசாலை ஒன்றில் 31 ஆசிரியர்கள் வெளிநாட்டிற்குச் சென்றிருந்ததுடன் தேவைப்பட்ட நிதியம் பாடசாலையின் கடிதத் தலைப்பைப் பயன்படுத்தி வியாபார நிறுவகங்களிடமிருந்து

பெறப்பட்டிருந்தன. எனினும், குறித்த தினத்தில் சென்றிராமையால் செயலமர்வில் பங்குபற்ற முடியாது போனதாக கலந்துகொண்ட ஆசிரியர்களின் கூற்றின் படி உறுதிப்படுத்தப்பட்டது.

(vii) நீச்சல் தடாகம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக மேற்குறித்த கல்லூரியின் மாணவர்களையும் ஆசிரியர்களையும் ஈடுபடுத்தி ஒரு மாணவனிடமிருந்து ரூபா 2,000 படியும் பல்வேறு தரப்பினரிடமிருந்து ரூபா 6,960,750 சேகரிக்கப்பட்டிருந்தது. எனினும், நீச்சல் தடாகத்தை நிர்மாணிப்பதற்கான அங்கீகாரம் பெறப்பட்டிராததுடன் 2013 யூலை மாதம் வரையிலும் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) ஏனையவை**

-----------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ை) மீளாய்வாண்டின் போது 150 மஹிந்தோதய கல்வியியல் கல்லூரிகளுக்கு தேவையான மரத்தளபாடங்கள் வழங்கப்பட்டு பொருத்தப்படுவதற்காக ரூபா 199,285,500 கூட்டுத்தொகையான 06 ஒப்பந்த உடன்படிக்கைகளுக்கு கட்டிட நிர்மாணிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. உடன்படிக்கைகள் நிபந்தனைகளின் படி, குறித்த தினத்தில் மரத்தளபாடங்கள் வழங்கப்பட்டு பூர்த்தியடைந்திராத போதிலும் ஒப்பந்தத்தின் காலம் நீடிக்கப்படுவதற்கும் உடன்படிக்கையின் நிபந்தனைகளின் பிரகாரம் தாமதக் கட்டணம் அறவிடப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்தத்தின் ஓர் பகுதியாகப் பெறப்பட்டிருந்த மரத்தளபாடங்களிற்கு உரிய தரச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட்டிராததுடன் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு முன்னர் மரத்தளபாடங்கள் கிடைக்கப்பெற்றிருந்தமையால் பொருத்துவதைப் பூர்த்திசெய்ய முடியாது பாடசாலைக் கட்டிட வழியிலும் ஏனைய இடங்களிலும் பாதுகாப்பின்றி தேக்கமடைந்து காணப்பட்டன. இந் நிலை உரிய பாடசாலைகளின் கற்றல் நடவடிக்கைகளுக்கு இடைஞ்சலை ஏற்படுத்தியிருந்தன.

(ை) முறையான திட்டமின்றி ரூபா 10,322,314 செலவில் 2013 பெப்ரவரி மாதமளவில் 17 மஹின்தோதய தொழிநுட்ப ஆய்வுகூடங்களுக்காக மரத்தளபாட உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் 2014 மார்ச் 31 ஆம் திகதியளவில் ஆய்வுகூடக் கட்டிட நிர்மாணிப்பு பூர்த்தியடைந்திராத காரணத்தால் அந்த மரத்தளபாட உபகரணங்கள் பாடசாலையின் பல்வேறு இடங்களில் பாதுகாப்பின்றி களஞ்சியப்படுத்தப்பட்டதுடன் இவை கற்றல் நடவடிக்கைகளுக்கும் இடைஞ்சலை ஏற்படுத்தியிருந்தன.

(ைை) கொழும்பு மாவட்டத்தின் தேசிய பாடசாலை ஒன்றின் புத்தக விற்பனை நிலையத்திற்காக அரசாங்க கொள்வனவு நடைமுறை வழிகாட்டலின் ஏற்பாடுகள் பின்பற்றப்படாது விற்பனை செய்யப்படும் அளவு தொடர்பான எதிர்வுகூறல் இன்றி முன்னைய ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் ரூபா 6,203,772 தொகையான விற்பனைப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. முன்னைய ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த கணக்குகளின் படி புத்தக விற்பனை நிலையத்தின் மொத்த விற்பனை வருமானம் ரூபா 4,803,035 தொகையாகவும் மொத்த இலாபம் ரூபா 2,475,619 தொகையாகவும் காணப்பட்டது. மொத்த இலாப வீதம் கிரயத்தின் 5 சதவீதம் என தீர்மானிக்கப்பட்டு பொருட்கள் விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியான மொத்த இலாபம் 52 சதவீதமான வழமைக்கு மாறான அளவைக் கொண்டிருந்தது.

(ஊ) 62 பாடசாலைகளுக்காகக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த பல்வேறு அலுவலக உபகரணங்கள் நேரடியாக பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டதாக பெறப்பட்டிருந்த அதிபரின் உத்தியோகபூர்வ முத்திரை பொறிக்கப்படாத பொருட் பெறுவனவுப்பத்திரத்தின் படி உரிய வழங்குனருக்கு ரூபா 5,876,109 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 1.10 போலியான வடிவிலான கொடுக்கல்வாங்கல்கள்

-----------------------------------------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட போலியான வடிவிலான கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

(அ) கண்டி மாவட்டத்தில் தேசிய பாடசாலை ஒன்றின் பெயரில் வங்கி நடைமுறைக் கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. மாதிரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 2013 சனவரி 01 ஆம் திகதி முதல் 2014 பெப்ரவரி 24 ஆம் திகதி வரையான காலப்பகுதியின் போது கல்லூரி விடுதிக்கு உலர் உணவு விநியோகிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டு போலியான பொருட்பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு, போலி விநியோகத்தரின் பெயரில் 20 குறுக்குக் கோடிடப்பட்டிராத காசோலைகள் மூலம் பணம் பெறப்பட்டிருந்ததுடன் அக் காலப்பகுதியின் போது மாத்திரம் ரூபா 484,494 தொகை குறைப்பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தன.

(ஆ) 2010 சனவரி 01 ஆம் திகதி முதல் 2014 மார்ச் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியின் போது மாத்தறை மாவட்டத்தில் தேசிய பாடசாலை ஒன்றின் விடுதியில் தங்கியிருக்கும் மாணவர்களிடமிருந்து விடுதிக் கட்டணம் அறவிடப்பட்டு வங்கியிலிடப்படாது சொந்தப் பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்டு ரூபா 1,287,650 தொகை குறைப்பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தன.

(இ) கொழும்பு மாவட்டத்தின் மத்திய மஹாவித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் நாளாந்த வருமானமாகப் பெறப்பட்டிருந்த 08 பற்றுச்சீட்டுக்களுக்குரிய ரூபா 310,853 கூட்டுத்தொகையில் ரூபா 262,602 மாத்திரம் வங்கியிலிடப்பட்டிருந்ததுடன் ரூபா 48,251 தொகை வங்கியிலிடப்பட்டிருக்கவில்லை.

## 1.11 நட்டங்களும் இழப்புகளும்

-----------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட நட்டங்களும் இழப்புகளும் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

(அ) பல்வேறு காலப்பகுதிகளின் போது கொழும்பு மற்றும் மாத்தறை மாவட்டங்களின் தேசிய பாடசாலைகளின் கல்வி மற்றும் கல்விசாரா பதவியணி உத்தியோகத்தர்களால் பாடசாலை நூலகத்திலிருந்து வெளியில் எடுத்துச் செல்லப்பட்டிருந்த போதிலும் இதில் 2,005 நூல்கள் மீள ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொழும்பு மாவட்டத்தின் தேசிய பாடசாலை ஒன்றின் சிற்றுண்டிச் சாலை உரிமையாளருடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் படி, வாடகை அறவிடப்பட்டிராத காரணத்தால் மீளாய்வாண்டிற்கு உரித்தாக உள்ள சிற்றுண்டிச்சாலை வாடகை வருமான நிலுவை ரூபா 1,283,000 தொகையானதுடன் அறவிடப்பட்டிராத மின்சாரப் பட்டியல்களின் மொத்தப் பெறுமதி ரூபா 372,598 ஆகக் காணப்பட்டது. வெளித்தரப்பினரிடமிருந்து பாடசாலைக்குக் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 300,000 தொகையான மானியத்தில் நிலுவைத் தொகையின் ஓர் பகுதியைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## 1.12 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

---------------------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுச் செவ்வையில் கண்டறியப்பட்ட சிக்கனமற்ற வகையில் உருவான கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

(அ) கணனி வசதிகளுடனான பாடசாலைகளுக்காக இணையதள வசதிகளை வழங்கும் நோக்கில் 2006 ஆம் ஆண்டின் போது பாடசாலை கணனி வலையமைப்பு ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் பாடசாலை உள்ளடங்கலாக 1,724 நிறுவனங்களுக்கு இணையதள இணைப்பு வழங்கப்பட்டிருந்தன. தனியார் நிறுவனம் ஒன்றும் அரச நிறுவகம் ஒன்றும் இது தொடர்பாக ஏற்படுத்தியிருந்த ஓர் உடன்படிக்கையின் படி, இணையதளத்தை ஸ்தாபிப்பதற்காக ரூபா 37,090,000 இற்குக் கிட்டிய தொகையும், 2006 ஆம் ஆண்டு முதல் 2013 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியின் போது பராமரிப்பிற்காக ரூபா 579,140,248 தொகையும் செலவிடப்பட்டிருந்ததுடன் இதில் ரூபா 222,327,173 தொகை மீளாய்வாண்டிற்கு உரித்தானவையாகும். இச் சேவை பயன்பாட்டில் ஆக்கபூர்வம் மற்றும் வினைத்திறன் தொடர்பில் திருப்தியற்றதாக இருந்தமை 414 பாடசாலைகளிலிருந்தும்

நிறுவகங்களிலிருந்தும் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. இக் கணனி வலையமைப்பு செயற்படுத்தப்பட்டிராத காரணத்தால் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் ரூபா 16,122,312 செலவிட்டு ஸ்தாபிக்கப்பட்டிருந்த கல்விசார் முகாமைத்துவ தகவல் முறைமையும் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

(ஆ) அமைச்சின் ஊடக அலகிற்காக தொழிநுட்ப உதவியாளர் ஒருவர் ஆட்சேர்க்கப்பட்டு ரூபா 180,000 தொகையான கொடுப்பனவு செலுத்தப்பட்டு 06 நோக்கங்களை எய்துவதற்கான பரிந்துரை பெறப்பட்டிருந்த போதிலும் அப் பரிந்துரை செயற்படுத்தப்படாது ரூபா 240,000 தொகையான படிப்பணம் செலுத்தும் அடிப்படையில் 2014 ஆம் ஆண்டின் போது மீள அவ் உத்தியோகத்தரே சேர்க்கப்பட்டிருந்தார்.

(இ) பின்தங்கிய மற்றும் மிகவும் பின்தங்கிய தனியான பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மேலதிகமான சீருடைத் தொகுதியும் பாதணி சோடியும் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவையால் எடுக்கப்பட்ட தீர்மானத்தைச் செயற்படுத்தும் பொறுப்பு கல்விச் சேவை அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. பாதணி சோடியிடும் பெட்டியை அச்சிடப்படுவதற்கு ஏற்ற உத்தியோகபூர்வ இலட்சனை பாடசாலை மாணவர்களின் ஆக்கங்களைக் கொண்டு பெற்றுக்கொள்ளப்படுவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டு ஆக்கங்களுக்கான போட்டி ஒன்றை நடாத்துவதற்கு 05 பத்திரிகைகளில் அறிவித்தல்கள் வெளியிடப்பட்டு ஏனைய நடவடிக்கைகளுக்காக ரூபா 410,972 தொகை மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்த போதிலும் போட்டி நடாத்தப்படவோ அல்லது பாதணிகள் கொள்வனவு செய்யப்பட்டோ இருக்கவில்லை.

(ஈ) கொழும்பு மாவட்டத்தின் தேசிய பாடசாலை ஒன்றின் பதவியணியில் நிரந்தரமான ஏழு சுகாதார ஊழியர்களும் இரு அமைய அடிப்படையிலான சுகாதார ஊழியர்களும் ஐந்து நிரந்தரமான காவலாளிகளும் இருக்கையில் பாடசாலையின் சுகாதார நடவடிக்கைகளுக்காகவும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகவும் தனியார் நிறுவகம் ஒன்றிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் இதற்காக மீளாய்வாண்டின் போது மாத்திரம் பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கணக்கிலிருந்து ரூபா 10,535,770 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

பாடசாலை வளாகத்தின் விசாலத்தையும் கல்விபயிலும் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் நாளாந்தம் வருகை தரும் வெளித்தரப்பினரின் எண்ணிக்கை தொடர்பாகக் கருத்திற்கொண்டு பாடசாலையின் சுகாதாரத்திற்காகவும் பாதுகாப்பிற்காகவும் இந் நடவடிக்கைகள் தனியார்மயமாக்கப்பட்டுள்ளதாகச் செயலாளரால் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

(உ) மேற்குறித்த (இ) இல் குறிப்பிடப்பட்ட பாடசாலையின் ''நவரங்கஹல'' இன் வருமானத்தில் ரூபா 1,870,256 தொகை வங்கி நடைமுறைக் கணக்கில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் உடனடி வைப்புகளில் வைப்புச் செய்யப்பட்டு வட்டி வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கொழும்பு மாவட்டத்தின் தேசிய பாடசாலையில் நீச்சல் தடாகத்தின் நீச்சல் பயிற்றுவிப்பாளருக்கு மாதாந்தம் ரூபா 35,000 படி சம்பளம் செலுத்தும் அடிப்படையில் சேர்க்கப்பட்டிருக்கையில் 2013 ஆம் ஆண்டின் போது வெளித்தரப்பினரால் அறவிடப்பட்டிருந்த ரூபா 1,016,758 தொகையில் ரூபா 762,569 தொகை பயிற்றுவிப்பாளர் கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தது. இதன் படி ரூபா 254,189 தொகை மாத்திரம் பாடசாலை வருமானத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டின் போது தடாகத்தின் செலவினம் ரூபா 686,481 ஆக இருந்தமையால் தடாகத்தின் மொத்த நட்டம் ரூபா 432,292 ஆகக் காணப்பட்டது.

(எ) கண்டி மாவட்டத்தின் தேசிய பாடசாலையின் நீச்சல் தடாகம் நிர்மாணிக்கப்பட்டு 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது 80 பாடசாலை மாணவர்கள் மாத்திரமே நீச்சல் பயிற்சிக்காகப் பதிவு செய்யப்பட்டிருந்தனர். 2013 சனவரி முதல் நவம்பர் வரையான காலப்பகுதியின் போது வெளித்தரப்பினரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானம் ரூபா 957,400 தொகையானதுடன் மொத்தச் செலவினம் ரூபா 1,324,311 ஆகக் காணப்பட்டமையால் மீளாய்வாண்டின் போது நீச்சல் தடாகத்தின் மொத்த நட்டம் ரூபா 366,911 தொகையாகக் காணப்பட்டது.

(ஏ) மீளாய்வாண்டின் போது ரூபா 143,750 தொகை செலவிடப்பட்டு கொழும்பு மாவட்டத்தின் மத்திய மஹாவித்தியாலயத்தில் 03 கைவிரலடையாள இயந்திரங்களும் பாதுகாப்பு கமரா முறைமையும் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 04 மாதங்களான குறுகிய காலத்திற்குள் 03 கைவிரலடையாள இயந்திரங்களும் செயலிழந்திருந்தன.

## 1.13 முகாமைத்துவ நலிவுகள்

---

தெரிவுக் கணக்காய்வுச் செவ்வையில் பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ‘‘யுனெஸ்கோ’’ நிறுவகத்தால் முன்னைய ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 3,347,579 தொகையான மானியத்தின் பயன்பாட்டிற்காக மீளாய்வாண்டின் போது குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கத்தின் மூலம் ரூபா 2,847,579 தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தன. உரிய நோக்கங்களை எய்த முடியாமையால் மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதனால் மீளாய்வாண்டின் இறுதியின் போது ‘‘யுனெஸ்கோ’’ நிறுவகத்திற்குக் கிடைக்கப்பெற்றிருந்த மொத்த ஏற்பாடும் மீள அனுப்பிவைப்பதற்கு நேர்ந்தது.

(ஆ) 09 மாகாணங்களிலும் விசேட தேவையுடனான மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்காக தேசிய மட்டத்தில் ஒருங்கிணைப்பு தொடர்பாடல் நிலையம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. இதற்காக 2007 ஆம் ஆண்டு முதல் நான்கு சந்தர்ப்பங்களின் போது ரூபா 56 மில்லியன் தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2014 யூன் 30 ஆம் திகதி வரையிலும் உரிய செயற்பாட்டிற்காக ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடுகளில் ரூபா 8,694,366 தொகை வேறு செயற்பாடொன்றிற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(இ) தேசிய கல்வியியல் கல்லூரிப் பாடநெறிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த பயிலுனர்கள் உரிய கல்வியியல் கல்லூரிக்குச் சேர்க்கப்படுகையில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை நிபந்தனைகளுக்கு முரணாக,

பாடநெறியைப் பூர்த்தி செய்திராத அல்லது அதனை வெற்றிகரமாக பூர்த்தி செய்த போதிலும் 05 ஆண்டுகள் ஆகக் குறைந்த சேவைக்காலத்தை கல்வி அமைச்சின் கீழான அரசாங்க பாடசாலை ஒன்றில் ஆசிரியராகக் கடமையாற்றியிராத 37 பயிலுனர்களிடமிருந்து 2013 திசெம்பர் 31 வரையிலும் ரூபா 15,489,323 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தேசிய பாடசாலைகளில் உள்ள சில மாணவர் விடுதி அரசாங்கம் பொறுப்பேற்காது விட்டமையால் விடுதி அத்தியாவசியமான கடமைகளுக்காக நிரந்தரப் பதவியணி ஒன்றை நியமிப்பதற்கு முடியாதிருந்தது. இதற்காக ஆசிரியர் சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் மற்றும்/ அல்லது அமைய அடிப்படையில் சேர்க்கப்பட்ட ஊழியர்களை நியமிப்பதற்கு நேர்ந்த காரணத்தால் விடுதியின் நிதிக் கட்டுப்பாட்டினதும் பராமரிப்பினதும் செயற்பாடுகளில் நலிவான நிலை காணப்பட்டது.

(உ) அமைச்சின் ஏற்பாட்டின் கீழ் மாகாண கல்வி திணைக்களத்தால் கொழும்பு மாவட்டத்தின் தேசிய பாடசாலை ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வரும் மாணவர் விடுதிக் கட்டிடம் 2011 ஆம் ஆண்டு முதல் நிர்மாணிப்புகள் ஸ்தம்பிதமாக்கப்பட்டிருந்ததுடன் சில இடங்களில் வெடிப்பிற்குள்ளாகியும் முறையான பராமரிப்பு முறையும் பின்பற்றப்பட்டிராத காரணத்தால் முதலாம் மாடியின் குளியலறை, மலசலகூட முறைமை மற்றும் ஏனைய இடங்கள் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத வகையில் சேதமடைந்திருந்தன. 6’ X 3’ அளவிலான 15 மெத்தைகளும் 6’ X 3’ அளவிலான 25 கட்டில்களும் 2012 ஏப்ரல் 06 ஆம் திகதி முதல் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது பாதுகாப்பின்றி கட்டிடத்தில் காணப்பட்டன.

(ஊ) மாத்தறை மாவட்டத்தின் ஓர் பாடசாலையில் 100 ஆண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்த பிரதான கட்டிடத்தைத் திருத்துவது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) முழு மதிப்பீடும் ஒரே தடவையில் தயாரிக்கப்படாது இரு சந்தர்ப்பங்களில் ரூபா 7,727,000 தொகைக்கும் ரூபா 3,912,482 தொகைக்கும் இரு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தக்காரருக்கு முறையே ரூபா 5,965,362 தொகையும் ரூபா 3,490,287 தொகையுமான ஒப்பந்தப் பெறுமதிக்காக இரு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(ii) மதிப்பீடு தயாரிக்கப்பட முன்னர் திருத்தப்பட வேண்டிய மற்றும் திருத்தப்படலாகாத பகுதிகளை நிச்சயமாக இனங்கண்டு மதிப்பீட்டை முறையாக தயாரிக்காமை மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் இரு ஒப்பந்தங்களில் வேலை குறித்த தினத்தில் பூர்த்திசெய்யப்பட்டிராமை போன்ற காரணங்களால், முதலாம் ஒப்பந்தக்காரருக்காக ரூபா 556,817 தொகையும் ரூபா 979,544 தொகையுமான மேலதிக வேலை மற்றும் வெளி வேலைகளுக்காகக் கொடுப்பனவை மேற்கொள்வதற்கு நேர்ந்திருந்தது.

(iii) “லெடிஸ்” பட்டி விநியோகிக்கப்பட்டு பொருத்தப்படுவதற்கு ரூபா 995,538 தொகையும், நீர் காப்பிற்கான மர பாதுகாப்பை இடுவதற்காக ரூபா 68,349 தொகையும் செலவிடப்பட்டிருந்த போதிலும் இவை மாதிரிகளுக்கும் நியமங்களுக்கும் இணங்காதவையாகக் காணப்பட்டதுடன் நிலத்திற்கு கொங்கிரீட்டும் சீமேந்தும் இடப்படுவதற்கு ரூபா 1,381,785 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் நிலம் முற்றாக குறுக்குப் பக்கமாக வெடிப்புற்றிருந்தமை பௌதீக மெய்மையாய்வின் போது கண்டறியப்பட்டது. கதவு மற்றும் யன்னல்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்த மரமும் திறப்புத் தகடும் உரிய தரத்துடன் இருக்கவில்லை.

(iv) முதலாவது ஒப்பந்தத்திற்கு உள்ளடக்கப்பட்டிருந்த 21 – ஏ 11 விடயங்கள் எய்தப்படாது இது இரண்டாம் ஒப்பந்தத்திற்குள் உள்ளடக்கப்பட்டிருந்தமையால் இதற்குரிய விலைகள் ரூபா 780 முதல் ரூபா 1,350 வரை உயர்வடைந்திருந்தன.

(v) மாத்தறை மாவட்டத்தின் மத்திய மஹா வித்தியாலயத்தில் நடாத்தப்பட்டு வரும் தென் மாகாண விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கான விளையாட்டு விடுதி மிகவும் பழுதடைந்த நிலையில் காணப்படுவதுடன் மாணவர்களின் புத்தகங்கள், ஆடைகள், கட்டில்களும் மெத்தைகளும் மழைநீரில் நனைந்து உக்கலடைந்து காணப்பட்டன. 10 மலசலகூடங்களும் பயன்படுத்தப்படுவதற்கு முடியாத நிலையில் நிலவியதுடன் மாணவர்களின் உணவுச் செலவினம் மற்றும் ஊழியர் சம்பளச் செலவினங்களுக்காக குறித்த வகையில் பணம் பெறப்பட்டிருக்கவில்லை. இவ் விடயங்கள் காரணமாக 2011 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையில் தங்கியிருக்கும் விளையாட்டு வீர வீராங்கனைகளின் எண்ணிக்கை 683 முதல் 262 வரை குறைவடைந்திருந்தன. விடுதித் திருத்த வேலைகளுக்காக ரூபா 3,410,000 தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக எவ்வித தொடர் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 1.11 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியணியும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 3,500 | 1,971 | 1,529 | - |
| (ii) | மூன்றாம் நிலை – நிறைவேற்று தரங்கள் | 16 | 12 | 6 | 2 |
| | - அதிபர் | 16,512 | 9,070 | 7,442 | - |
| (iii) | இரண்டாம் நிலை – ஆசிரியர்கள் | 215,028 | 216,231 | - | 1,203 |
| | நிறைவேற்றுத்தரமற்றோர் | 4,266 | 3,133 | 1,220 | 87 |
| (iv) | ஆரம்ப நிலை – கனிஸ்ட நிலை | 8,092 | 4,094 | 4,002 | 4 |
| (v) | ஏனையோர் | 3 | 1,100 | - | 1,097 |
| | மொத்தம் | 247, 417 | 235,611 | 14,199 | 2,393 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைச்சால் தயாரிக்கப்பட்டிருந்த புதிய அமைப்புக் கட்டமைப்பின் படி புதிய கடமைகளைத் திட்டமிடுவதற்காகவும் தேவையான பதவியணியை எடுத்துக் கொள்வதற்காகவும் ஒவ்வொரு கிளைகளுக்குரிய செயற்பாடுகள் மற்றும் பொறுப்புகளை நிச்சயமாக இனங்கண்டு கொள்வதற்காகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அமைச்சில் தற்போது ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பகுதிகளுக்கும் உரித்தாக உள்ள நிறைவேற்று மற்றும் நிறைவேற்றுத் தரமற்ற பதவியணி மற்றும் அந்த ஒவ்வொரு பகுதியினதும் பொறுப்புகள் அல்லது மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளுடன் இணங்கம் செய்யப்பட்டிராமையால் பதவியணியின் உள்ளபடியான பற்றாக்குறை அல்லது மிகை கணிப்பிடப்படுவதற்கு முடியாதிருந்தது. மேலும், உத்தியோகத்தர்களின் இடமாற்றம், ஓய்வுபெறுதல்கள் மற்றும் புதிய நியமனங்கள் வழங்கப்படுதல் தொடர்பான தகவல்கள் மனித வள அபிவிருத்தி கிளைக்கு மாற்றுதல் தொடர்பாக முறைமை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிராமையால் பதவியணி தொடர்பான நாளதுவரையாக்கப்பட்ட தகவல் முறைமை ஒன்றைத் தயாரிப்பதற்கு மனித வள அபிவிருத்திக் கிளைக்கு முடியாதிருந்தது.

(ii) பாடசாலை ஒன்றின் முகாமைத்துவ மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் மீது அப் பாடசாலை மாணவர்களுக்குக் கிடைக்கப்பெறும் கல்வியின் தரமும் ஆக்கபூர்வமான தன்மையும் நிர்ணயிக்கப்படுவதாலும் பாடசாலையின் நற்பெயரைப் பாதுகாப்பதற்காகவும் பதவியணி அங்கத்தவர்கள் தலைமைத்துவத்திற்காக ஒன்றிணைக்கப்படுவதற்கும் அதிபர் பதவிக்காக நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கு செயற்படுவது அத்தியாவசியமான செயற்பாடான போதிலும் வெற்றிடங்கள் நிரப்புவதற்கு திட்டமிடப்பட்ட முறையில் முறையான நடைமுறை பின்பற்றப்படாது ஒவ்வொரு பாடசாலைகளின் பெயரிலும் விண்ணப்பங்கள் கோரப்பட்டு வெற்றிடங்கள் நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த காரணத்தால் நாடெங்கிலும் உள்ள 350 தேசிய பாடசாலைகளில் 100 இற்கு 2014 பெப்ரவரி 05 ஆம் திகதி வரையிலும் 01 – 14 வரையான கால இடைவெளியுடன் அதிபர் பதவி நிரப்பப்படாமல் காணப்பட்டதுடன் அக் கால இடைவெளியில் அப் பதவிகளிற்குப் பதில் கடமையாற்றுவதற்கு அல்லது கடமை மேவப்படுவதற்கு அதிபர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

## 2. ஒதுக்கீட்டுத் தலைப்பு 212 – இலங்கை பரீட்சைகள் திணைக்களம்

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதியறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 யூலை 24 ஆம் திகதி திணைக்களத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தது.

### 2.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை தயாரித்தல் மற்றும்

நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக்கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**2.3 கணக்காய்வு அவதானிப்புகள்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பன இதன் (அ) முதல் (இ) வரையான அவதானிப்புக்கள் மற்றும் 2.4 முதல் 2.9 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகள் என்பவற்றை தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

**(அ) ஏடுகளும் பதிவேடுகளும் பேணப்படாமை**

1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பாதீட்டு முரண்கள்**

05 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்பு ரூபா 97,049,060 தொகையானதுடன் இது அச் செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 46 முதல் 99 சதவீதமான வீச்சில் காணப்பட்டது.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

21201 ஆம் விடய இலக்கத்தைக் கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குத் தொடர்பாக அத்தினத்தில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 702,755 ஆகக் காணப்பட்டதுடன் அந் நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

## 2.4 சொத்து முகாமைத்துவம்

### (அ) விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

போலவலான பயிற்சி நிலையத்திற்கு உரித்தான கட்டிடங்கள் 1726.93 சதுர மீற்றர் 03 ஆண்டுகளுக்கும் மேலான காலமாக விளைவற்றுக் காணப்பட்டன.

### (ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2010 திசெம்பர் 17 ஆம் திகதிய பீஎப்/மெய்மையாய்வு சபை/ 01 ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆம் திகதிய 441 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ் அறிக்கை 2013 மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தால் மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2014 யூலை 27 ஆம் திகதியே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 2.5 இணங்காமைகள்

### (அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசீலனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் விபரிக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| ------------------------------ | | ------------ | -------------------- |
| | | ரூபா | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| ------------------------------------------------ | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 94 | 34,869,087 | 05 செலவின விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டதை அடுத்துள்ள சேமிப்புகள் ரூபா 1,350,954 தொகைக்கு மேலாக மீளாய்வாண்டின் போது பொறுப்புகளுக்கு உட்பட்டிருந்தன. |
| (ii) | நிதிப் பிரமாணம் 396(இ) | 7,042,607 | வழங்கப்பட்டு எனினும் காலம் கடந்த ரூபா 6,989,045 கூட்டுத்தொகையான 4057 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப் பிரமாணம் 756(4) | - | விளைவற்ற சொத்துக்களை இனங்கண்டு அவை தொடர்பாக அறிக்கையிடப்படுவதற்காக விசேட சபை ஒன்று பிரதான கணக்களிப்பு உத்தியோகத்தரால்/ கணக்களிப்பு உத்தியோகத்தரால் நியமிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (iv) | நிதிப் பிரமாணம் 1647 (ஆ) | - | திணைக்கள வாகனங்கள் தொடர்பில் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |

**2.6 செயலாற்றல்**

-------------------

**திட்டமிடல்**

-----------------

மீளாய்வாண்டின் போது பரீட்சைத் திட்டத்தின் படி திணைக்களத்தால் 230 நிறுவக ரீதியானதும் வெளிநாட்டுப் பரீட்சைகளும் நடாத்தப்படுவதற்காகத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 141 பரீட்சைகள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

**2.7 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

--------------------------------------------------

வருடாந்த கடித உறைகளின் தேவைப்பாட்டை இனங்காணாது கடித உறைகள் கொள்வனவு செய்யப்பட்டமையால் 2013 செப்தெம்பர் வரையில் ரூபா 12,578,410 பெறுமதியான முன்னாள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் பெயர் பொறிக்கப்பட்ட 12 வகையான 1,672,786 கடித உறைகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது களஞ்சியத்தில் எஞ்சிக்காணப்பட்டன.

**2.8 முகாமைத்துவ நலிவுகள்**

--------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தூர இடங்களிற்குப் பயணம் செய்வதற்காக குழு வாகனம் பயன்படுத்தப்படுகையில் எரிபொருள் முற்பணம் அவ் வாகனத்திற்குப் பொறுப்பாகப் பயணம் செய்யும் உத்தியோகத்தருக்கு வழங்கப்படாது அவ் வாகனங்களின் சாரதிகளுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் குழு வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்புவது வாகனத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரின் கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டிற்காக தனியார் நிறுவகம் ஒன்றினால் 12,500 இந்தோனேசியன் வுட் பிரீ கடதாசி ரீம்கள் ரூபா 41,797,559 இற்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் மனுதாரர்களுக்கான அறிவுறுத்தல் படிவத்தில் 31 ஆம் பந்தியின் படி விநியோகிக்கப்பட்ட பொருட்கள் குறித்த மாதிரிகளுக்கு இணங்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. சில சந்தர்ப்பங்களின் போது மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்ட

கடதாசிகள் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தின் மூலம் பரீட்சிக்கப்பட்டு மாதிரிகளுக்கு இணங்கியிராத சந்தர்ப்பங்கள் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவினது பரிந்துரையேனும் பெற்றுக்கொள்ளப்படாது உடன்படிக்கையிடப்பட்ட மொத்தத் தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.

## 2.9 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 84 | 64 | 20 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 16 | 10 | 06 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 394 | 337 | 57 | - |
| (iv) | ஆரம்ப மட்டம் | 166 | 122 | 44 | - |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | - | 69 | - | 69 |
| | மொத்தம் | 660 | 602 | 127 | 69 |

## 3. ஒதுக்கீட்டுத் தலைப்பு 213 – கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

---

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதியறிக்கைகள், இணைக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 யூலை 21 ஆம் திகதி திணைக்களத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தது.

### 3.2 கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணைக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள், இணைக்கக் கூற்றுக்கள் என்பவற்றை தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக்கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**3.3 கணக்காய்வு அவதானிப்புகள்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பன இதன் (அ) முதல் (ஈ) வரையான அவதானிப்புக்கள் மற்றும் 3.4 முதல் 3.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகள் என்பவற்றை தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

**(அ) கணக்குகள் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்காக 21302 ஆம் விடய இலக்கத்தைக் கொண்ட பாடசாலைகளுக்காக இலவசமாக பாடப்புத்தகங்களை தயாரித்து விநியோகிக்கும் அங்கீகரிக்கப்பட்ட முற்பணக் கணக்கு 2014 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் இது 23 நாட்கள் தாமதத்துடன் 2014 மே 23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாட்டை மிகைத்து பொறுப்புகள் ஏற்படல்**

நிதிப் பிரமாணம் 94(1) இல் காண்பிக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக 05 விடயங்களுக்காக ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டதை அடுத்து சேமிப்பு ரூபா 7,420 தொகையை மீறி ரூபா 320,072 தொகையான பொறுப்புகள் ஏற்பட்டிருந்தன.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

21301 ஆம் விடய இலக்கத்தைக் கொண்ட முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத் திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 479,365 தொகையானதுடன் அந் நிலுவை மீதியை அறவிடுவதற்காக திணைக்களம் தவறியிருந்தது.

**(ஈ) 21302 ஆம் விடய இலக்கத்தைக் கொண்ட பாடசாலைகளுக்கான நூல் அச்சீடு, வெளியீடு மற்றும் விற்பனை தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட முற்பணக் கணக்கு**

---

(i) பாடவிதான மாற்றம் மற்றும் வேறு காரணங்களால் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட முடியாதவையாக மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளின் மூலம் இனங்காணப்பட்ட ரூபா 312,831,071 தொகையான புத்தகங்கள் அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் கைதவிர்க்கப்பட்டிருந்த போதிலும் இம் மீதி புத்தகங்களிலிருந்து அகற்றப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2009 திசெம்பர் 31 ஆம் திகதி முதல் நிலவிவரும் ரூபா 303,469,564 தொகையான பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்ட புத்தக இருப்புக் கணக்கின் பெறுமதி புத்தகங்களிலிருந்து அகற்றப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2012 ஆம் ஆண்டின் முற்பணக் கணக்குகளின் கணக்காய்வின் போது சுட்டிக் காட்டப்பட்டிருந்த செலவினம் அங்கீகரிக்கப்பட்ட பயன்பாடுகளின் பெறுமதிக்கும் நிலையான சொத்தின் கிரயத்திற்கும் இடையே ஐந்தொகையின் ரூபா 223,582 தொகையான வேறுபாடு ஏற்பட்டமைக்கான காரணங்கள் ஆராயப்பட்டு தீர்க்கப்படுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) 2013 வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் படி திருத்தப்பட்ட ஆகக் கூடிய பொறுப்புகளின் எல்லை ரூபா 1,950,000,000 ஆகக் காணப்பட்டதுடன் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி மொத்தப் பொறுப்புகள் ரூபா 1,884,542,544 தொகையான அங்கீகரிக்கப்பட்ட செலவின எல்லையும் உள்ளபடியான செலவினம் தொடர்பான கூற்றில் எடுத்துக்காட்டப்படாது உள்ளபடியான பொறுப்புகள் எதுவும் ‘‘இல்லை’’ எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(v) 2012 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 949,940 கூட்டுத்தொகையான சொத்துக்களுக்காக ரூபா 284,982 தொகையான பெறுமானத்தேய்வுகள் இனங்காணப்பட்டிராமையால் வருடாந்த இலாபமும் நிலையான சொத்துக்களின் பெறுமதி அதே தொகையால் மிகைபெறுமதியாகக் காணப்பட்டது.

(vi) அச்சீட்டு கடன்கொடுத்தோருக்கு பணக் கொடுப்பனவுப் பதிவேட்டின் படி புத்தகங்களின் பக்கங்கள் அதிகரித்தமையால் ரூபா 21,154 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் பக்கங்கள் குறைந்தமையால் ரூபா 4,037 தொகை குறைத்துக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் கடன்கொடுத்தோர் கணக்கிற்கு இவ் இரு தொகைகளுக்கும் இடையேயான வேறுபாட்டுத் தொகையான ரூபா 17,117 தொகை சீராக்கப்பட வேண்டிய போதிலும் பேரேட்டின் கடன்கொடுத்தோர் கணக்கிற்கு பக்கங்கள் மாற்றமடைந்தமையால் சீராக்கப்பட்ட தொகை ரூபா 50,167,130 ஆகக் காணப்பட்டது. இப் பெறுமதிச் சீராக்கம் தொடர்பாக உறுதியான சான்றுகள் எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) அச்சீட்டு முற்பணப் பேரேட்டின் படி 2013 திசெம்பர் 31 இன் உள்ளவாறு தீர்க்கப்படாத முற்பணத்தொகை ரூபா 340,960,140 தொகையான போதிலும் பேரேட்டில் அம் முற்பண மீதி ரூபா 326,339,399 ஆகக் காணப்பட்டது. இதன் பிரகாரம், தீர்க்கப்படாத முற்பணம் ரூபா 14,620,741 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(viii) அங்கீகரிக்கப்பட்ட முற்பணக் கணக்கின் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 8,323,968 ஆகக் காணப்பட்டதுடன் அந் நிலுவை மீதியை அறவிடுவதற்காக நிறுவகம் தவறியிருந்தது.

(ix) சில சொத்துக்கள் கிரயம் அல்லது சந்தைப் பெறுமதி எனும் இரண்டில் எது குறைவானதோ அதன்படியே பெறுமதியிடப்பட வேண்டிய போதிலும் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத கிரயத்தில் பெறுமதியிடப்பட்ட ரூபா 11,099,227 தொகையான ஆரம்ப முடிவு

இருப்பிற்கும் ரூபா 17,262,456 தொகையான இறுதி முடிவு இருப்பிற்கும் ஏலவிற்பனையிடப்படாது உள்ளடக்கப்பட்டிருந்தது.

(x) முற்பணக் கணக்கு நடவடிக்கைகளின் கீழ் உள்ள வியாபாரப் பொருட்களின் இருப்புக்கள் தொடர்பான காணாமற் போதல்கள் அல்லது நட்டங்கள் தொடர்பான கூற்றொன்று இலாப நட்டக் கணக்கில் கீழே காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட முடியாத மற்றும் சேதமடைந்த புத்தகங்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 வங்கிக் கணக்குப் பேணலிலான குறைபாடுகள்

---

### சீராக்கப்பட வேண்டிய மீதி

---

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தால் 2013 திசெம்பர் மாதத்திற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த வங்கி கணக்கிணக்கக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்ட சீராக்கங்கள் தொடர்பான பகுப்பாய்வின் படி, 01 ஆண்டிற்கு மேலும் 03 ஆண்டுகளுக்குக் குறைவாக வழங்கப்பட்டு எனினும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிராத ரூபா 15,194 தொகையான காசோலை ஒன்று காணப்பட்டது.

## 3.5 நோக்கங்களுக்கு முரணான கொடுப்பனவுகள்

---

1000 மஹின்தோதய பாடசாலைகளின் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான பத்திரிகை விளம்பரம் ஒன்றை வெளியிடுவதற்காக ரூபா 308,000 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் இது இலவசமாக பாடநூல்களை விநியோகிப்பதற்கான ஓர் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**3.6 செயற்பாட்டு திறமையீனங்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2011 ஆம் ஆண்டின் போது மேலதிக நூல் வெளியீட்டின் கீழ் ''பொருளாதார மேம்பாடு மற்றும் அபிவிருத்தி'' களில் 2000 புத்தகங்கள் அவசரக் கொள்வனவின் கீழ் விலைகள் கோரப்படாது கூடிய விலைக்கு அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தில் அச்சிடப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் விற்பனைப் பெறுமதி ரூபா 1,836,980 தொகையான 1733 புத்தகங்கள் விற்பனை செய்யப்படாது ஓல்கொட் களஞ்சியத்தில் காணப்பட்டது.

(ஆ) 2007 ஆம் ஆண்டின் போது அச்சிடப்பட்டிருந்த சிங்கள மொழியிலான 50,000 கணித வாய்பாட்டுப் புத்தகங்களில் 2014 மார்ச் 31 ஆம் திகதி வரை 8866 பிரதிகள் மாத்திரமே விற்பனை செய்யப்பட்டிருந்தமையால் விற்பனைப் பெறுமதி ரூபா 2,056,700 பெறுமதியான 41,134 புத்தகங்கள் விற்பனை செய்யப்படாது களஞ்சியத்தில் காணப்பட்டன.

(இ) 2012 பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் படி, 44,929 கணக்கு வாய்பாட்டுப் புத்தக மீதி இருக்கையில் மீண்டும் ரூபா 54,500 இற்கு 10,000 புத்தகங்கள் அச்சிடுவதற்காக 2013 பெப்ரவரி 21 ஆம் திகதி கட்டளை வழங்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் தினமாகிய 2013 ஒக்டோபர் 13 ஆம் திகதி வரையில் எந்தப் பிரதியும் விற்பனை செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2012 ஆம் ஆண்டிற்காக பாடப்புத்தகங்களின் அச்சிடுவதற்கான முதலாவது கட்டளையின் மூலம் வழங்கப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை போதாத காரணத்தால் 150 வகையிலான 936,800 பிரதிகள் அச்சிடப்படுவதற்காக கட்டளைகள் வழங்கப்பட்டிருந்தன. அக் கட்டளைப் பத்திரத்தினதும் நிபந்தனைப் பத்திரத்தின் படியும் ஒப்படைக்கப்படுவதற்குத் தாமதமான புத்தகங்களிற்காக மொத்தத் தண்டப்பணமும் அறவிடப்பட வேண்டிய போதிலும் 2012 மே 30 ஆம் திகதிய ஈபிடி/எப்டி/01 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அறவிடப்பட்டிருந்த தாமதமான பணம் அச்சீட்டு நிறுவகங்களின் கோரலிலோ அல்லது

கோரப்படாதோ மீளச் செலுத்தப்படுவதற்கு செயற்பாட்டுக் குழு அங்கத்தவர்களால் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் 30 புத்தக வகைகளுக்காக அறவிடப்பட்ட ரூபா 866,033 தொகையான தாமதமான தண்டப் பணம் மீளச் செலுத்தப்பட்டிருந்தன.

## 3.7 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான தகவல்கள் பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 45 | 36 | 09 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 01 | 03 |
| (iii) | இரண்டாம் நிலை | 104 | 57 | 47 |
| (iv) | ஆரம்ப நிலை | 71 | 51 | 20 |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 315 | 130 | 185 |
| | மொத்தம் | 539 | 275 | 264 |